# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, ஒற்றோபர் மாதம் 27 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 15.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

## *2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்*

*[2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.-ஒ. 43/2004*

### *1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.*

***2.*** *(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் விரிவுப் பெயர் இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது.*

> *"காணி மீட்பு தொடர்பிலான தேசிய கொள்கைக்கிணங்க அமைச்சரின் கட்டளையால் வெளிப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய இடப்பரப்புகளின் அபிவிருத்திக்கும் மீட்பிற்குமென இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என அறியப்படவுள்ள கூட்டுத்தாபனமொன்றைத் தாபிப்பதற்கும் அத்தகைய கூட்டுத்தாபனம் பொறியியல் துறையில் நிர்மாண வேலைகளையும் ஆலோசனைப் பணிகளையும் பொறுப்பேற்பதற்கு அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்ப செய்வதற்குமானதொரு சட்டம்."*

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ மற்றும் 2ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

***3.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை 2அ அத்துடன் 2ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-*

" காணி மீட்பு, அபிவிருத்தி இடப்பரப் பொன்றை நிரப்புவதற்கு அல்லது அபிவிருத்தி செய்தலுக்கு எதிரான தடை.

2அ(1) கூட்டுத்தாபனத்தின் எழுத்திலான அங்கீகாரமில்லாமல் ஆள் எவரும் 2 ஆம் பிரிவின் கீழ் ஒரு காணி மீட்பு அபிவிருத்தி இடப்பிரதேசமாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் காணி இடப்பிர தேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் காணிப் பரப்பளவை எத்தகையதுமான ஏதேனும் முறையில் நிரப்புதலோ அல்லது அபிவிருத்தி செய்தலோ ஆகாது.

(2) காணி மீட்பு அபிவிருத்தி இடப்பிரதேச மொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப் பிரதேசத்தினுள் காணியின் ஏதேனும் பரப்பளவை நிரப்புவதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரத்தை நாடும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் மீது, கூட்டுத்தாபனமானது, அவசியமானதென அது கருதக்கூடியதான அத்தகைய நியதி நிபந்தனை களுக்கமைவாக, அதற்கான அங்கீகாரத்தை வழங்க லாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமை வாக அங்கீகாரமொன்று வழங்கப்படுகின்றதோ அந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக் கும் இணங்கி ஒழுகத் தவறுகின்ற ஒவ்வோர் ஆளும் இச்சட்டத் தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றாரெனக் கூட்டுத்தாபனத் தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக் கப்படுகின்றவிடத்து, அவர் சட்ட விரோதச் செயற் பாட்டைக் கொண்டு நடாத்துவதிலிருந்து அத்த கைய ஆளைத் தடுப்பதற்கான தோதான நடவடிக் கைகள் எல்லாவற்றையும் எடுத்தல் வேண்டும் என்பதுடன், அவசிய மானவிடத்து, சார்த்தப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடு கொண்டு நடாத்தப்படும்

காணியின் பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பகுதி எந்தப் பொலிசு நிலையத்தின் அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலரின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் சட்ட விரோதச் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துவதிலிருந்து அத்தகைய ஆளையும் அவரது முகவர்களையும் அல்லது சேவையாளர்களையும் தடுப்பதற்கு, பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அவசியமான சகல உதவியையும் வழங்குவது அத்தகைய பொலிசு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ்க் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சேவையாளர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் சட்ட விரோதச் செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதிலிருந்து எவரேனும் ஆளைத் தடுக்கத் தவறுகின்றவிடத்து, சார்த்தப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடு கொண்டுநடாத்தப்படும் காணிப் பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்துக் குள்ளாக அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு மேற்கூறிய (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படாதவாறு அவரை அல்லது அவரது முகவர்களை அல்லது சேவையாளர்களைத் தடுக்கும் கட்டளையொன்றை வழங்குவதற்கும் அத்துடன் அவசியமேற்படுமிடத்து அத்தகைய காணிப் பரப்பளவில் எழுப்பப்பட்டிருக்கும். முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியாகவாயினுஞ் சரி கட்டப்பட்டிருக்கும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது அமைப்பை

அழிப்பதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்கும் கட்டளை ஒன்றை வழங்குவதற்குமான விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழான விசாரணையின் முடிவின்மீது, காரணத்தைக் காட்டும் ஆள் காணியின் ஏதேனும் பரப்பை நிரப்புவதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்குச் சட்டமுறையான அதிகாரத்தைக் கொண்டுள்ளாரென நீதிவான் திருப்தியடையாவிடின்,

(அ) இப்பிரிவை மீறும் ஏதேனும் செயலைச் செய்வதிலிருந்து அத்தகைய ஆளை அல்லது அவரின் சேவையாளர்களையும் முகவர்களையும் தடுக்கும் கட்டளையொன்றையும் ; அத்துடன்

(ஆ) அவசியமேற்படுமிடத்து அதன்மீது கட்டப்பட்ட ஏதேனும் கட்டிடத்தை அல்லது அமைப்பை அழிப்பதற்கு அதிகாரம் வழங்கும் கட்டளையொன்றையும்

அவர் ஆக்குதல் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவின் கீழ், அங்கீகாரம் வழகப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய அங்கீகாரம் எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்பட்டதோ அந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி ஒழுகத் தவறுகின்றவிடத்து, கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய ஆளை அதற்கு இணங்கியொழுகுமாறு பணிக்கலாம். அத்துடன் அத்தகைய ஆள் அவ்வாறு செய்யத் தவறுகின்றவிடத்து, அவர், காணியின் பரப்பளவு அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்து -

(அ) விதிக்கப்பட்ட நியதிகளையும், நிபந்தனைகளையும் மீறிச் செயலாற்றாதவாறு, அத்தகைய ஆளையும் அவரது முகவர்களையும் சேவையாளர்களையும் கட்டுப்படுத்துகின்ற ; அத்துடன்

(ஆ) விதிக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கியொழுகி, வேலையை நிறைவேற்றுவதற்கு அல்லது நிறைவேற்றச் செய்விப்பதற்கு அத்தகைய தொழிற்பாட்டின் செலவை அந்த ஆளின் மீது பொறுப்பாக்குவதற்குக் கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கின்ற,

கட்டளை ஒன்றைப் பெறலாம்.

(8) இச்சட்டத்தின் 20அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் முறையே (5) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளின் கீழ்ச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இடப்பரப் பொன்றை தாழ்ந்த, சதுப்பு, கழிவு அல்லது சேற்று இடப்பரப்பாக வெளிப்படுத்தல்.

2ஆ. (1) அமைச்சரானவர், காணிகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2 ஆம் பிரிவின்கீழ், காணி மீட்பு அபிவிருத்தி இடப்பிரதேசம் ஒன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு காணி தவிர்ந்த, காணியின் ஏதேனும் இடப்பரப்பை, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், தாழ்நில, சதுப்பு, கழிவு அல்லது சேற்று இடப்பிரதேசமாகத் தீர்மானித்து, அத்தகைய ஏதேனும் இடப்பிரதேசத்தை நிரப்புவதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு இணங்கியொழுகப்படவேண்டிய தேவைப்பாடுகளை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கலாம்.

(2) தாழ்நில, சதுப்பு, கழிவு அல்லது சேற்று இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்ட (1) ஆம் உட்பிரிவின் கீழான ஒரு கட்டளை அத்தகைய இடப்பரப்பின் வரம்புகளையும் எல்லைகளையும் எடுத்துக் காட்டுவதன் மூலம் அத்தகைய இடப்பிரதேசத்தை வரையறுத்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அந்த உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பிரதேசத்தில் ஏதேனும் நிரப்புதல் அல்லது அபிவிருத்தியை நிறைவேற்ற உத்தேசிக்கும் ஒவ்வொரு ஆளினதும் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அதை மீறிச் செயலாற்றும் ஆள், எவரும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழ் ஒரு கட்டளை ஆக்கப்படுமிடத்து, அத்தகைய கட்டளையினால் வெளிப்படுத்தப்பட்ட இப்பிரதேசத்தினுள்ளிருக்கின்றதும், கட்டடங்களின் அல்லது உட்பிரிவுகளின் நிர்மாணத்தின் நோக்கத்திற்கென எந்த உள்ளூரதிகாரசபைகளின் அல்லது ஏதேனும் அதிகார சபையின் அங்கீகாரம் பெறப்படுதல் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த உள்ளூரதிகார சபைகள் அல்லது ஏதேனும் அதிகாரசபைகளானவை அத்தகைய அங்கீகாரத்தை வழங்கும்போது, அக்கட்டளையில் குறித்து ரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவாவென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகள் இணங்கியொகப்படாதவிடத்து, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், அதன் திருப்திக்கு அத்தகைய தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படும்வரை, விடயத்திற்கேற்ப அத்தகைய கட்டடங்களின் அல்லது உட்பிரிவின் நிர்மாணத்தை அங்கீகரிக்க மறுப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) எவரேனும் ஆள் (3) ஆம் உட்பிரிவை மீறிச் செயல்படுகின்றாரெனக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக்கப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட இடப்பிரதேசம் எந்த நீதிவான் நீதிமன்றத்

தின் உள்ளூர் நியாயாதிக்கத்துனுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு மேற்கூறிய (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயல்படாதவாறு அத்தகைய ஆளை அல்லது அவரது முகவர்களை அல்லது சேவையாளர்களைத் தடுக்கும் கட்டளையொன்றையும், அவசிய மேற்படுமிடத்து அத்தகைய காணிப்பரப்பளவில் எழுப்பப்பட்டிருக்கும், முற்றாகவாயினுஞ்சரி அல்லது பகுதியளவிலாயினுஞ்சரி கட்டப்பட்டிருக்கும், ஏதேனும் கட்டடத்தை அல்லது அமைப்பை அழிப்பதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்குவதற்கான கட்டளை ஒன்றையும் வழங்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(6) இச்சட்டத்தின் 20அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) விசாரணையின் முடிவின்மீது காரணத்தைக் காட்டும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமைக்கான போதிய காரணத்தைக் கொண்டிருக்கிறார் என நீதிவான் திருப்திப்படாவிட்டால், அவர் இப்பிரிவை மீறும் ஏதேனும் செயலைச் செய்வதிலிருந்து அத்தகைய ஆளை அல்லது அவரின் சேவையாளர்களையும் முகவர்களையும் தடுக்கும் கட்டளையொன்றையும் மற்றும் ஏதேனும் கட்டடத்தை அல்லது அமைப்பை அழிப்பதற்கு அதிகாரம் வழங்கும் கட்டளையொன்றையும் ஆக்குதல் வேண்டும்.".

*4அ, 4ஆ, ஆகிய பிரிவுகளை 4ஆ, 4இ என மீள இலக்கமிடுதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4அ மற்றும் 4ஆ என்னும் பிரிவுகளை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆ மற்றும் 4இ என்னும் பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன்மூலம் அச் சட்டவாக்கம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 4அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தில் 4 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 4அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"கால்வாய் ஒதுக்கங்களை வெளிப்படுத்துதல்.*

*4அ(1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் கால்வாய்க்கரையில் உள்ள ஏதேனும் காணியின் இடப்பரப்பை அத்தகைய காணி இடப்பரப்பு எந்த உள்ளூர் அதிகார சபைக்குள்ளாக அமைந்துள்ளதோ அந்த உள்ளூர் அதிகாரசபையின் சம்மதத்துடன், கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய கட்டளையானது அந்த இடப்பரப்பின் எல்லைகளையும் வரம்புகளையும் எடுத்துக் காட்டுவதன்மூலம் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பை வரையறுத்தலும் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ்க் கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில், கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரது எழுத்திலான அங்கீகாரமின்றி தற்காலிகமாகவாயினுஞ்சரி வேறுவகையாகவாயினுஞ்சரி கட்டிடங்கள் அல்லது கட்டிடவமைப்பு எவையும் நிர்மாணிக்கப்படுதலாகாது. இந்த உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரமொன்று முறையே, காணி அமைந்துள்ள பெரும்பாகத்தின் அல்லது மாகாணத்தின் பிரதேசச் செயலாளரின் அல்லது மாகாணக் காணி ஆணையாளரின் விதப்புரையின் மீது பிரதான நிறைவேற்று அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.*

*(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற அல்லது எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய (2) ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத்*

தவறுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) ஆளெவரும் (2) உட்பிரிவிற்கு முரணாகச் செயற்படுகின்றார் எனக் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறிவிக்கப்படுமிடத்து, மேற்கூறப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுவதினின்று அவரை அல்லது அவரது முகவர்களை அல்லது சேவையாளர்களைத் தடைசெய்யும் கட்டளையொன்றை வழங்குவதற்காகவும் அத்துடன் கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் இடப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டிடவமைப்பை இடித்தழிப்பதற்கான கட்டளையொன்றை வழங்குதவற்காகவும் கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பு எந்த நீதிவான் நீதிமன்றத்தின் உள்ளூர் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதின்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) விசாரணையின் முடிவில், பிரதான நிறைவேற்று அலுவலரின் எழுத்திலான அங்கீகாரமின்றிக் கட்டிடம் அல்லது கட்டிடவமைப்பு நிர்மாணிக்கப்பட்டிருந்ததென நீதிவான் திருப்திப்படின் அவர், இப்பிரிவிற்கு முரணான ஏதேனும் செயலைச் செய்வதினின்று அத்தகைய ஆளை அல்லது அவரது சேவையாளர்களையும் முகவர்களையும் தடை செய்யும் கட்டளையொன்றை ஆக்குதலும், மேலும் விடயத்திற்கேற்ப அத்தகைய கட்டிடத்தை அல்லது கட்டிடவமைப்பை இடித்தழிப்பதற்குக் கட்டளையிடுதலும் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததோ அந்த ஆள் எவரும் எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய

அத்தகைய அங்கீகாரம் வழங்கப்பட்டதோ அந்த நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, பிரதான நிறைவேற்று அலுவலர் அதற்கு இணங்கியொழுகுமாறு அத்தகைய ஆளைப் பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய ஆள் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, அவர், அத்தகைய கால்வாய் ஒதுக்கிடம் அல்லது அதன் ஏதேனும் பாகம் எந்த நீதிவானின் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவானின் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம் என்பதுடன்,

(அ) விதிக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு முரணாகச் செயற்படுவதினின்று அத்தகைய ஆளை அல்லது அவரது முகவர்களையும் சேவையாளர்களையும் தடைசெய்யும் ; அத்துடன்

(ஆ) விதிக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகி நிர்மாண வேலையை மேற்கொள்வதனையும் அல்லது மேற்கொள்ளுவிப்பதனையும் அத்துடன் அத்தகைய நிர்மாணத்திற்கான செலவை அந்த ஆளிடமிருந்து அறவிடுவதனையும் கூட்டுத்தாபனத்திற்கு இயலச் செய்யும்,

கட்டளையொன்றையும் பெறலாம்.

(7) இச்சட்டத்தின் பிரிவு 20அ என்பதன் ஏற்பாடுகள் (4) ஆம் உட்பிரிவின்கீழும் (6) ஆம் உட்பிரிவின் கீழும் ஆக்கப்பட்ட ஒரு விண்ணப்பம் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**6.** (3 ஆம் பிரிவினால் மீள இலக்கமிட்டவாறான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆ என்னும் பிரிவு, "3 ஆம் பிரிவின்கீழ் அல்லது 3அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் கொள்ளப்பட்ட ஏதேனும் காணியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "3 ஆம் பிரிவின் கீழ் அல்லது

3அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் கூட்டுத் தாபனத்தால் கொள்ளப்பட்ட அல்லது ஏதேனும் அத்தகைய காணியில் வீடுகளையும் கட்டிடங்களையும் நிர்மாணித்து விற் பனை செய்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியின் "நிர்மாண வேலை யையும் ஆலோசனையும் ஒப்படைப்புப் பணிகளையும் பொறுப் பேற்றல்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிர்மாண வேலை யையும் ஆலோசனை ஒப்படைப்புப் பணிகளையும் பொறுப் பேற்றல் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஈ) கால்வாய்களின் பொறுப்பு, முகாமைத்துவம், முன் னேற்றம், பராமரிப்பு அத்துடன் கட்டுப்பாடு என்ப வற்றைக் கொண்டிருத்தலும் கால்வாய்கள் அசுத்த மாதலைத் தடைசெய்தலும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ, 20ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 20அ, 20ஆ என்னும் பிரிவுகள் என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"தடை செய் கட்டளைக்கான விண்ணப் பத்திற்கான நடைமுறை.*

20அ. (1) பிரிவு 2அ என்பதன் (5) ஆம் உட்பிரி வின் கீழ், பிரிவு 2ஆ என்பதன் (5) ஆம் உட்பிரிவின் கீழ், பிரிவு 4அ என்பதன் (4) ஆம் உட் பிரிவின்கீழ் அல்லது பிரிவு 20இ என்பதன் (2) ஆம் உட்பிரி வின்கீழ் கட்டளையொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விடயங்களை உறுதிசெய்யும் சத்தியக்கடதாசி யொன்றை ஆதாரமாகக் கொண்டிருத்தல் வேண் டும்.

(2) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மீது நீதிவான் விண்ணப்பத்தில் பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்கு, வழங்கும் அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தகைய அழைப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குப் பிந்தாத ஒரு தேதி) தோன்றி அவர் அல்லது அவரது சேவையாளர்கள் அல்லது முகவர்கள் விண்ணப்பத்தில் கோரப்பட்டவாறு ஏன் தடைசெய்யப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக்காட்டுமாறு உடனடியாக அழைப்பாணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) அத்தகைய அழைப்பாணை எந்த ஆளுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆள் அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று, நீதிமன்றத்தில் தோன்றத் தவறினால் அல்லது அத்தகைய கட்டளை வழங்கப்பட்டதற்கு எதிராகக் காரணம் எதுவும் காட்டுவதற்கில்லை என நீதிமன்றத்திற்கு அறிவித்தால் நீதிமன்றமானது உடனடியாக விண்ணப்பத்தில் கோரப்பட்டவாறு கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) எந்த ஆளுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் நீதிமன்றத்திற் தோன்றி அத்தகைய கட்டளை வழங்குவதற்கெதிராகக் காட்டுவதற்கான காரணம் தமக்குண்டு எனக் கூறினால் நீதிமன்றம் உடனடியாக வழக்கைத் தொடர்ந்து நடத்தலாம் அல்லது பிந்திய தேதியொன்றில் விசாரணைக்காக வழக்கை ஒத்திவைக்கலாம்.

(5) நீதிவான் நீதிமன்றம் விண்ணப்பத்துக்கு ஆதாரமாக சாட்சியம் எதனையும் கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரிடமிருந்து கோருவதற்குத் தகுதியுடையதாதல் வேண்டும்.

(6) விசாரணையின் முடிவில் நீதிமன்றம் விடயத்திற்கேற்ப 2அ என்னும் பிரிவில் அல்லது 2ஆ என்னும் பிரிவில் அல்லது 4அ என்னும் பிரிவில் அல்லது 20இ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு கட்டளையொன்றை வழங்கலாம் அல்லது விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யலாம்.

*பிரதான நிறைவேற்று அலுவலரின் சான்றுப் பத்திரம் அதிலுள்ள உண்மை நிகழ்வுகளுக்கு முதற்தோற்ற சாட்சியமாதல் வேண்டும்.*

20ஆ. இச்சட்டத்தின்கீழ்த் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் காணி —

(அ) காணிமீட்பு அபிவிருத்தி இடப்பரப்பாக 2 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றில் அமைந்துள்ளதா ; அல்லது

(ஆ) 2ஆ என்னும் பிரிவின் கீழான கட்டளையொன்றினால் தாழ்நில, சதுப்புநில, தரிசுநில அல்லது சேற்று நில இடப்பரப்பாகத் தீர்மானிக்கப்பட்ட இடப்பரப்பொன்றில் அமைந்துள்ளதா ; அல்லது

(இ) 4அ என்னும் பிரிவின் கீழான கட்டளையொன்றினால் கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றில் அமைந்துள்ளதா,

என்ற கேள்வி எழுமிடத்து, அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட காணி விடயத் திற்கேற்ப, காணிமீட்பு, அபிவிருத்தி இடப்பரப்பொன்றில் அல்லது தாழ்நில, சதுப்புநில, தரிசு நில அல்லது சேற்றுநில இடப்பரப்பொன்றில் அல்லது கால்வாய் ஒதுக்கிடமொன்றில் அமைந்துள்ளது என்ற பயன்பாட்டிற்கான கூட்டுத்தாபனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் கைப்பட்ட சான்றிதழொன்று சாட்சியத்தில் ஏல்தகவுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்றச் சாட்சியமாதலும் வேண்டும்.” .

*கால்வாய்களைத் தீழ்ப்புப் படுத்துதல் தவறொன்றாதல்.*

20இ. (1) பிரிவு 4அ என்பதன்கீழான கட்டளையின் மூலம் கால்வாய் ஒதுக்கிடமொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் கால்வாயை ஏதேனும் தீழ்ப்பாக்கியை அத்தகைய கால்வாயினுள் கொட்டுதல்மூலம் அல்லது வெளியேற்றுவதன்மூலம் தீழ்ப்புப்படுத்துகின்ற அல்லது

தீழ்ப்புப்படுத்துதலைச் செய்விக்கின்ற எவரேனு மாள்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறை யாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதது மாக குற்றப் பணமொன்றுக்கும் அத்துடன் குற்றத்தீர்ப்பின் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் விடயத்தில் அவ்வாறு தவறு தொடரு கின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபா குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அத்தகைய தீழ்ப்புப்படுத்தலானது —

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களை விஞ்சு கின்றவொரு காலப்பகுதிக்கு தடை யின்றித் தொடருமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய கால்வாயின் கட்டற்ற நீரோட்டத்தை அல்லது நீரின் காப்பை அல்லது தரத்தைப் பேணுவதற்குப் பாரதூரமான அச்சுறுத்தலை விளை விக்குமிடத்து,

நீதிவானானவர், கூட்டுத்தாபனத்தினால் விண் ணப்பமொன்று செய்யப்படுவதன்மேல் உடனடி யாக, சூழ்நிலைகளில் அவசியமாக இருக்கின்ற வாறாக பிசுக்காலின் அல்லது பொலிசாரின் உதவி யுடன், அத்தகைய தீழ்ப்புப்படுத்துதலை விளைவிப் பதற்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பொறுப்பாகவுள்ள ஏதேனும் தொழிலை, வியா பாரத்தை அல்லது செயற்பாட்டை மூடிவிடுவதன் மூலம் தீழ்ப்புப்படுத்துதலுக்கான காரணிகளை அகற்றிவிடும்படி அத்தகைய தீழ்ப்புப்படுத்துதலை விளைவிக்கின்ற ஆட்களைக் கட்டளைமூலம் தேவைப்படுத்துதல் வேண்டும் ;

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக "தீழ்ப்புப் படுத்துதல்", மற்றும் "தீழ்ப்பாக்கி" என்பன, 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் அச்சட்டத்திலுள்ளவாறான அதேபொருளை உடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

*"எந்தத் தவறுக்குத் தண்டனை விதித்துரைக் கப்பட வில்லையோ அந்தத் தவறுக்கான தண்டனை.*

22அ. இச்சட்டத்தின்கீழ் எந்தத் தவறுக்குத் தண்டனை விதித்துரைக்கப்படவில்லையோ அந்தத் தவறொன்றுக்குக் குற்றவாளியான ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததும் ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத காலத்துக்கான குற்றப்பணம் மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு "சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் முடிவில் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"தேக்கிவைத்த இடப்பரப்பு" என்பது, நீர்ப்பெருக்கெடுப்பையும் ஓடும் நீரையும், குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு, குறிப்பிட்ட இடப்பரப்பில் காணப்படும் வடிகால் முறையால் அந்நீரை வெளியேற்றக்கூடிய நிலை ஏற்படும்வரை தேக்கிவைப்பதற்கென இனங்காணப் பட்ட ஏதேனும் தாழ்ந்தநில இடப்பரப்பு என்று பொருள் படும்." .

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்